**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.</u>**

O.S.No.253/2025 பெயர் : பிரசன்னா வெங்கடேஷ் நாள் : 29.04.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 1 மற்றும் 3-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

தாவா சொத்தில் எத்தனை மின் இணைப்புகள், எத்தனை குடிநீர் இணைப்புகள் உள்ளது என்றால், மின் இணைப்பு இரண்டு உள்ளது, தண்ணீர் ஒரு இணைப்பு உள்ளது. மின் இணைப்பு, குடிநீர் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால், குடிநீர் இணைப்பு கமலாட்சி மற்றும் நாச்சிமுத்து ஆகியோர் பெயரில் உள்ளது, மின் இணைப்பு நாச்சிமுத்து பெயரில் மட்டும் உள்ளது. தாவா சொத்துக்கான வரிவிதிப்பு யார் பெயரில் உள்ளது என்றால், நாச்சிமுத்து மற்றும் கமலாட்சி ஆகியோரின் பெயரில் உள்ளது. இன்றைய தேதி வரை தாவா சொத்துக்குண்டான மின் இணைப்பு, குடிநீர் வரி மற்றும் சொத்து வரி நான் செலுத்தவில்லை என்றால், சரியல்ல, செலுத்தி வருகிறேன். அதுபோல் நான் செலுத்தியுள்ள மின் இணைப்பு, குடிநீர் வரி மற்றும் சொத்து வரி ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால், முடியும், என் கைவசம் உள்ளது. தாவா தாக்கல் செய்தபோது, பிராதுடன் மேற்படி ரசீதுகள் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. தாவா சொத்தில் எனக்கு எந்தவித உரிமையும் இல்லாத காரணத்தால், நான் இன்றைய தேதி வரை எந்தவிதமான வரியும் செலுத்தவில்லை என்றால், சரியல்ல. தரைதளத்தில் உள்ள மின் இணைப்புக்குண்டான கட்டணத்தை 3-ம் பிரதிவாதியும், முதல் தளத்தில் உள்ள மின் இணைப்புக்குண்டான கட்டணத்தை என் தாயாரும் செலுத்தி வருகிறார் என்றால், சரிதான். தாவா சொத்தை பொறுத்து 24.11.2011-ம் தேதியில் என்

தாயாருக்கும், மற்ற பிரதிவாதிகளுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்ட விபரம் எனக்கு முன்பே தெரியும் என்றால், சரியல்ல. என் தாயார் உள்பட மற்ற பிரதிவாதிகள் அனைவரும் தாவா சொத்தில் எனக்கு உள்ளதாக கூறப்படும் உரிமையை மறுத்து பாகப்பிரிவினை செய்துக்கொண்டார்கள் என்றால், சரியல்ல. பாகப்பிரிவினைப் பத்திரத்தை ரத்து செய்யக்கோரி பரிகாரம் கோராமல் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. தாவா சொத்தில் தற்சமயம் நான் என் தாயாரான 2-ம் பிரதிவாதியின் வாரிசு என்ற முறையில் தாவா சொத்தில் உரிமை கோர முடியுமே தவிர, கமலாட்சியின் வாரிசு என்ற முறையில் உரிமை கோரமுடியாது என்று சொன்னால், சரியல்ல. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால், இல்லை, நான் 3-ம் பிரதிவாதியிடம் நேரில் சென்று கேட்டேன். நான் என் தாயாரான 2-ம் பிரதிவாதியிடம் சொத்தை பிரித்து தருமாறு கேட்டேனா என்றால், இல்லை. நான் எந்த காலகட்டத்திலும், 3-ம் பிரதிவாதியிடம் பாக உரிமை கோரவில்லை என்றாலும், வழக்கிற்கான வழக்குமூலம் இல்லை என்றாலும், சரியல்ல. தாவா சொத்தை என் தாயாரும், மற்ற பிரதிவாதிகளும் பாகப்பிரிவினை செய்துக்கொண்டதன் அடிப்படையில் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னாலும், சரியல்ல.